# பதினெண்கீழ்க்கணக்கில் அற வாழ்வியல் கட்டமைப்பு

**சீ.குமார்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை
அரசு கலைக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**மலர்:** 3
**இதழ்:** 2
**தொகுதி:** II
**மாதம்:** அக்டோபர்
**வருடம்:** 2018
**ISSN:** 2454-3993

## தொடக்கவுரை

தமிழர்கள் எப்படியும் வாழலாம் என்றில்லாது இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்ந்து வந்துள்ளனர். இதற்கு பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, ஆகிய பழந்தமிழ் இலக்கியங்கள் சான்றாகின்றன. சங்க காலத்தில் எழுந்த பாட்டும் தொகையும் **"பதினெண்மேற்கணக்கு"** என்றும், சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களும் **"பதினெண்கீழ்க்கணக்கு"** என்றும் வழங்கப்படுகின்றன. மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்பன பாடல்களின் அடி அளவைக் கருத்தில் கொண்டு வழங்கப்பெறுகின்றன. தழிழர்களின் வாழ்க்கைமுறை சங்க காலத்தில் அகம், புறம் என இரண்டாகவும் சங்கம் மருவிய காலத்தில் அறம், அகம், புறம் என்ற மூன்றாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளது. பதினெண்கீழக்கணக்கில் பெறும்பான்மை அற இலக்கியங்களாகும். ஒழுக்கங்கள் பற்றி தனியாக எழுந்த அற நூல்கள் முதன்முதலில் பதினெண்கீழக்கணக்கில்தான் இடம்பெற்றுள்ளன. ஆகவே, **பதினெண்கீழக்கணக்கில் அற வாழ்வியல் கட்டமைப்பு** குறித்து ஆராய்வது இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

## அறம் - விளக்கம்

அறம் என்னும் சொல்லானது காலப்போக்கில் பல்வேறு பொருள்களை உணர்த்தும் பொருட்செறிவு வாய்ந்த சொல்லாக அமைந்துள்ளது. 'அறு' என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்ததே **'அறம்'** என்னும் சொல்லாகும். 'அறு' என்னும் அடிச்சொல்லிற்கு 'அறுத்துச் செல்', 'வழியை உண்டாக்கு', 'உருவாக்கு', 'துண்டி', 'வேறுபடுத்து' என்ற பல வகைப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. 'அம்' எனும் தொழிற்பெயர் விகுதி அறுத்தலாகிய தொழிலை உணர்த்துகிறது. இத்தகைய சொல்லமைப்பியல் ஆராய்ச்சியின் அடிப்படையில் 'அறம்' என்னும் சொல்லிற்குப் பின்வரும் விளக்கம் தரப்படுகிறது. **"மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே – முழுநிறைவடிவமே – அறம் என்று கூறுவர்"** என்று க.த.திருநாவுக்கரசு வரையறை தந்துள்ளார். அந்தவகையில், பதினெண்கீழக்கணக்கில் அற நூல்கள் கட்டமைத்துள்ள அற வாழ்வியல் குறித்து தொடர்ந்து காணலாம்.

**பதினெண்கீழ்க்கணக்கில் அற வாழ்வியல் கட்டமைப்பு**

இல்வாழ்க்கை - ஒழுக்கமுடைமை - பிறனில் விழையாமை - அழுக்காறாமை - பொய்யாமை - கொல்லாமை - ஊன் உண்ணாமை - கள்ளுண்ணாமை அல்லது மது அருந்தாமை போன்றவை பதினெண்கீழ்க்கணக்கில் அற வாழ்வியல் கட்டமைப்பு காரணிகளாக அமைந்துள்ளன.

**இல்வாழ்க்கை**

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்வாழ்க்கையாகும். அதனால்தான் திருவள்ளுவர் **இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம்** என்கின்ற அதிகாரங்களைக் கட்டமைத்துள்ளார். அறமாகிய இலவாழ்க்கையானது மற்றவன் பழிக்கும் குற்றமில்லாமல் விளங்கினால் மேலும் சிறப்பானதாகும் என்பது,

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று** **(திருக்குறள், 0049)**

என்னும் குறளின் மூலம் புலப்படுகிறது. மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலமாகும். நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு அணிகலனாகும் என்று தெய்வப்புலவர் தெரிவித்துள்ளார். மக்கட்பேறு இல்லை என்றாலும் அதற்காக கணவன் மனைவியை நீக்க முடியாது. இதனை,

**மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்**
**பூண்டான் கழித்தற் கருமையாற்** **(நாலடியார், 056:1-2)**

என்னும் வரிகளின் மூலம் அறியலாம். திருமண உறவின் அருமை புரியாது, இன்றைய சமுதாயத்தில் மணவிலக்குப் பெறுதலும் நடக்கிறது.

**ஒழுக்கமுடைமை**

நல்ல நெறிகளைக் கடைபிடித்து ஒழுகும் பண்பே ஒழுக்கமுடைமை ஆகும். வாழ்க்கையில் எல்லா மேன்மைகளையும் தருவது ஒழுக்கமாதலால், அவ்வொழுக்கம் உயிரினும் மேலானதாகக் கருதப்படும். இக்கருத்தினை,

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்** **(திருக்குறள், 0131)**

என்பதனால் உணரலாம். இக்கருத்துக்கு வலுவூட்டும் விதமாக கூடலூர்கிழார் கல்வியைக் காட்டிலும் ஒழுக்கமே உயர்வானது என்பதை,

**ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை** **(முதுமொழிக்காஞ்சி, 1:1-2)**

என்று பதிவு செய்துள்ளார். இவற்றிலிருந்து ஒழுக்கத்தின் உயர்வை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**பிறனில் விழையாமை**

ஒருவன் காம மயக்கத்தால் பிறனுடைய மனைவியை விரும்பக் கூடாது. **ஒருவனுக்கு ஒருத்தி அல்லது ஒருத்திக்கு ஒருவன்** என்பதே தமிழரின் பண்பாடு. இப்பண்பாட்டை வலியுறுத்தும் விதமாகவே திருக்குறளில் **'பிறனில் விழையாமை'**, நாலடியாரில் **'பிறன்மனை நயவாமை'** என்னும் அதிகாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு** **(திருக்குறள், 0148)**

பிறனுடைய மனைவியை விரும்பாதவனுடைய பேராண்மையானது, சான்றோர்க்கு அறம் மட்டுமன்று நிறைந்த ஒழுக்கமுமாகும். பிறன் மனைவியை விரும்புவோனை பகை, பழி, பாவம், அச்சம் என்னும் இந்நான்கு தீமைகளும் நீங்காது என்ற கருத்து, திருக்குறளிலும்(0146), நாலடியாரிலும்(082) இடம் பெற்றுள்ளன.

**பல்லா ரறியப் பறையறைந்து நாள்கேட்டுக்**
**கல்யாணஞ் செய்து கடிப்புக்க – மெல்லியற்**
**காதன் மனையாளும் இல்லாளா என்ஒருவன்**
**ஏதின் மனையாளை நோக்கு** **(நாலடியார், 086)**

திருமணம் செய்துக் கொண்ட தன் அன்புடைய மனைவி வீட்டில் இருக்க, பிறனுடைய மனைவியின் மீது காதல் கொள்வது ஏனோ? என்று நாலடியார் வினவியுள்ளது இங்கு நினைக்கத் தக்கதாகும்.

**அழுக்காறாமை**

அழுக்காறாமை என்பது பொறாமை கொள்ளாத பண்பாகும். பிறர் மேன்மையைக் கண்டு பொறாமை கொள்வதை பாவம் என திருக்குறள் சுட்டுகிறது.

**அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்** **(திருக்குறள், 0168)**

பொறாமை என்கிற பாவியானது ஒருவனுடைய செல்வத்தை அழிப்பதோடு அவனையும் தீய வழியில் செலுத்திவிடும். எனவே, பிறனுடைய ஆக்கம் கண்டு பொறாமை கொள்ளாமையாகிய அழுக்காறாமை என்னும் பண்பு இன்றைய உலகுக்குத் தேவையாகிறது.

**பொய்யாமை**

பொய்யாமையாகிய அறத்தை உண்மையாகவே போற்றி வாழ்ந்தால் மற்ற அறங்களைச் செய்யாமையும் நல்லதாகும். இதனை,

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று** **(திருக்குறள், 0297)**

என்னும் குறளின் மூலம் அறியலாம். பொய் பிறந்த போதே நட்புக் கெட்டுவிடும் என்பதனை,

**துர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே** **(நான்மணிக்கடிகை, 77:1)**

என்பதன் வாயிலாக உணரலாம். பொய்யான ஒழுக்கம் பொன்னிறத்தைப் போன்ற அழகிய உடம்பை, வாடச் செய்துவிடும் என்ற கருத்து,

**பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை** **(நான்மணிக்கடிகை, 23:2)**

என்பதிலிருந்து விளங்குகிறது. பொய்யாமை அறத்தைப் பின்பற்றி வாழ்ந்தால் மற்ற அறங்களை செய்யாமையும் நன்மை பயக்கும்.

**கொல்லாமை**

ஓர் உயிரையும் கொலை செய்யாதிருக்கும் நற்பண்பு கொல்லாமை எனப்படும். இப்பண்பே அறமாகிய செயலாவதை,

**அறவினை யாதெனில் கொல்லாமை** **(திருக்குறள், 0321)**

என்னும் வள்ளுவர் வாக்கால் அறியலாம்.

**எல்லா விடத்துங் கொலைதீது** **(நான்மணிக்கடிகை, 95:1)**

வேள்வி முதலான இடங்களிலும் உயிர்க்கொலை புரிவது தீமையாகும். கொலைப்பழியானது எவ்வளவு மறைப்பினும் கொன்றான் மேலேயே வெளிப்படும் என்பது,

**கொன்றான்மேல் நிற்குங் கொலை** **(நான்மணிக்கடிகை, 92:4)**

என்பதனால் வெளிப்படுகிறது.

**…… …… …… உயிர்நோவக்**
**கொல்லாமை நன்று …… ……** **(சிறுபஞ்சமூலம், 39:1-2)**

பிறிதோருயிர் வருந்த கொல்லாதிருத்தல் நன்மை பயக்கும் என்பது வெளிப்படுகிறது.

**ஊன் உண்ணாமை**

ஓர் உயிரையும் கொல்லாமல் காய்கறி உணவுகளை உண்பவர்களே இனிதாக உண்பவர்களாவர். இதனை,

**இனிதுண்பா னென்பான் உயிர்கொல்லா துண்பான் (நான்மணிக்கடிகை, 61:1)**

என்று விளம்பிநாகனார் சுட்டியுள்ளார். ஊனுணவு உண்ணாமல் அருளொழுக்கத்தோடு இருத்தலே உயிர்களுக்கு பற்றுக்கோடாகும் (நான்மணிக்கடிகை, 40:3-4).

**ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா (இன்னா நாற்பது, 23:2)**

ஒருவன் பிறிதோர் உயிரின் ஊனைத் தின்று, தன்னுடைய ஊனை வளர்த்தல் மிகவும் துன்பமானது என்றும், புலால் உண்ணுதலை விரும்பி வாழ்வது மக்கள் உயிருக்கு துன்பத்தை விளையும் என்றும் கபிலர் அறிவுறுத்தியுள்ளார் (இன்னா நாற்பது, 13:3).

உயிரைக் கொல்லுதலும், கொல்லப்பட்ட உயிரின் தசையைத் தின்னுதலும் ஒருவனை நஞ்சுபோலத் துன்பம் செய்யும் (சிறுபஞ்சமூலம், 13:1). ஓருயிரைக் கொன்று, அதன் தசையைத் தின்பவனுடைய நாக்கானது அற்று விழும் (சிறுபஞ்சமூலம், 10:1).

உயிரைக் கொன்றவன், பிறர் செய்யும் கொலைக்கு உடன்பட்டவன், கொன்ற ஊனை விலைக்கு வாங்கியவன், அவ்வூனைச் சமைத்தவன், அதனை உண்டவன் ஆகிய இவ்ஐவருக்கும் உயிர்க்கொலை பாவம் உண்டாகும் என்பதனை,

**கொன்றான் கொலையை உடன்பட்டான் கோடாது**
**கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால் -கொன்றதனை**
**அட்டான் இடவுண்டான் ஐவரினும் ஆகுமெனக்**
**கட்டெறிந்த பாவங் கருது. (சிறுபஞ்சமூலம், 70)**

என்னும் பாடலின் மூலம் காரியாசான் சுட்டிக்காட்டியுள்ளது இங்கு நினைக்கத்தக்கதாகும். பிறர்புரியும் கொலைத் தொழிலை விரும்பாதவனும், எந்த உயிரையும் கொல்லாதவனும், புலாலை உண்ணாதவனும் மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் வணங்குதற்கு உரியவனாவான் (ஏலாதி, 02).

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும் (திருக்குறள், 0260)**

ஓருயிரையும் கொல்லாமல் புலால் உண்ணாமல் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும். எனவே ஊன் உணவைத் தவிர்த்து காய்கறி உணவுகளை உண்பது சாலச் சிறந்ததாகும்.

**கள்ளுண்ணாமை, மது அருந்தாமை**

பழங்கால கள் குடிக்கும் பழக்கத்தையும் தற்கால மது அருந்தும் பழக்கத்தையும் ஒன்றென உணரலாம். கள் குடிக்கும் பழக்கத்தை சங்க இலக்கியங்கள் எதிர்க்கவில்லை. இதனை முதன்முதலாகக் கடிந்தவர் திருவள்ளுவரே.

**துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுஉண்பார் கள்உண் பவர் (திருக்குறள், 0926)**

உறங்கினவர் இறந்தவரைவிட வேறுபட்டவரல்லர். அதுபோல கள்ளுண்பவரும் அறிவு மயங்குதலால் நஞ்சு உண்பவரே என்பது வள்ளுவர் வாக்கு. மனிதன் மதுவைக் குடிக்கிறான் என்பதைவிட, மது மனித குடிக்கிறது என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

**நிறைவுரை**

இலக்கியம் என்பது மனித வாழ்வியலைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாகும். காதலையும் வீரத்தையும் சங்க இலக்கியம் விவரிக்கிறது. அற வாழ்வியல் குறித்து பதினெண்கீழ்க்கணக்கு

நூல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. அறம் என்பது மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறிகளாகும். சிறந்த அறமாவது இல்வாழ்க்கையாகும். நன்மக்களைப் பெறுவது அவ்வில்வாழ்க்கையின் பயனாகும். வாழ்க்கையில் எல்லா மேன்மைகளையும் தரவல்லது ஒழுக்கமுடைமை. அவ்வொழுக்கம் உயிரைவிடவும் உயர்வானது. பிறன்மனை நோக்காத தன்மையே பேராண்மையாகும். பிறர் மேன்மையைக் கண்டு பொறாமைக் கொள்ளக் கூடாது. எவ்விடத்தும் பொய் சொல்லக் கூடாது. ஒருயிரையும் கொலைச் செய்யக் கூடாது. ஓர் உயிரின் ஊனையும் உண்ணக் கூடாது. காய்கறி உணவுகளை உண்பதே இனிதாகும். மனித உயிரைக் குடிக்கும் மதுவை அருந்தாமை நன்றாகும். பதினெண்கீழ்க்கணக்கு அற நூல்கள் கட்டமைத்துக் காட்டியுள்ள இத்தகைய வாழ்வியல் அறங்கள், இன்றைய மனித வாழ்வியலை வளமாக்க வழிவகுக்கும் என்பது தெளிவாகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. திருநாவுக்கரசு, க.த., திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, மறுபதிப்பு, 1977.
2. பதினைண்கீழ்க்கணக்கு, கழக வெளியீடு, சென்னை, மறுஅச்சு, 2007.